# புதுவைப் பல்கலைக்கழகம்
## தோட்டக்கலைத் துறை

ஆர். வெங்கட்ராமன் நகர், காலாப்பட்டு, புதுச்சேரி – 605 014.

**PU/Hort/ F. Tree wood auction, 2015 /14-15/443,** **Dated: 19.03.2015.**

## ஏல அறிவிப்பு

புதுவைப் பல்கலைக்கழக வளாகத்தில் **தானே புயலினால்** பாதிக்கப்பட்ட வெட்டிய தேக்கு மரங்கள், முழுவதும் சாய்ந்த மரங்கள் மற்றும் இதர காய்ந்த மரங்கள் மரக் குவியல்களாக வெட்டிவைக்கப்பட்டுள்ள இருக்கின்றவை இருக்கின்ற நிலையில் ஏலம் எடுக்க, www.auctionindia.com என்கின்ற இணையதளம் மூலம் 15.04.2015 **புதன்கிழமை அன்று காலை 10.00 மணி முதல் மதியம் 01.00 மணிவரை** பொது ஏலம் விடப்பட உள்ளது.

ஏலத்திற்கான விண்ணப்ப படிவங்கள், விதிமுறைகள் மற்றும் இதர விபரங்களை புதுவைப் பல்கலைக்கழக இணையதளத்தின் (**www.pondiuni.edu.in**) மூலமாக அறிந்து கொள்ளலாம்.

## முக்கிய அறிவிப்பு / நிபந்தனைகள்

| | |
|---|---|
| **விண்ணப்பம் சமர்ப்பிக்க கடைசி தேதி** | : 08.04.2015 – **மாலை** 05.30 **மணி வரை.** |
| **ஏலம் நடைபெற உள்ள தேதி** | : 15.04.2015 – **காலை** 10.00 **மணி முதல்** 01.00 **மணி வரை.** |

**ஏலம் விடப்பட உள்ள மரங்களின் விபரங்கள்:**

a. முழுவதும் காய்ந்த / சாய்ந்த தேக்கு மரங்கள் 26 குவியல்கள் - தோட்டக்கலை நர்சரி
b. முழுவதும் காய்ந்த / சாய்ந்த் பென்சில் மரங்கள் - தோட்டக்கலை நர்சரி
c. முழுவதும் காய்ந்த / சாய்ந்த் விறகு மரங்கள் - தோட்டக்கலை நர்சரி
d. முழுவதும் காய்ந்த / சாய்ந்த மரங்கள் - மேற்கு பகுதி காம்பவுண்ட் மதில் சுவர் (Compensatory Afforestation Programme)
e. முழுவதும் காய்ந்த / சாய்ந்த மரங்கள் - கல்பனா சாவ்லா பெண்கள் விடுதிக்கு எதிர்புறம் (Compensatory Afforestation Programme)
f. முழுவதும் காய்ந்த / சாய்ந்த மரங்கள் - இஞ்ஜினியரிங் காலேஜ் சோலார் நிலையம் அருகில் (Compensatory Afforestation Programme)
g. முழுவதும் காய்ந்த / சாய்ந்த மரங்கள் - 40 யூனிட் அப்பார்ட்மெண்ட் குடியிருப்பு தென்புறம் (Compensatory Afforestation Programme)
h. முழுவதும் காய்ந்த / சாய்ந்த மரங்கள் - கிரீன் எனர்ஜ்ஜி டெக்னாலஜி கட்டிட பின்புறம் (Compensatory Afforestation Programme)
i. முழுவதும் காய்ந்த / சாய்ந்த மரங்கள் - வேதியியல் துறை கட்டிடத்திற்கு பின்புறம் (Compensatory Afforestation Programme)

**இடம் :** ஆர்.வி.நகர்
**தேதி :** 19.03.2015

**பதிவாளர்**
**புதுவைப் பல்கலைக்கழகம்**

புதுவைப் பல்கலைக்கழகம்
தோட்டக்கலைத் துறை
ஆர். வெங்கட்ராமன் நகர், காலாப்பட்டு, புதுச்சேரி – 14.

# ஏல விண்ணப்பம்

**விண்ணப்ப எண்:**__________ **தேதி:** _____________

புதுவைப் பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள **தானே புயலினால்** பாதிக்கப்பட்ட மற்றும் புதிய கட்டிடம் அமையவுள்ள பகுதிகள், புதியதாக மரக்கன்றுகள் நடப்பட்டுள்ள (Comp. Afforestation) பகுதிகள் மற்றும் இதர பகுதிளில் சாய்ந்த / காய்ந்த மரங்களை வெட்டி மரக் குவியல்களாக வைக்கப்பட்டுள்ளவற்றை இருக்கிறவை இருக்கின்ற நிலையில் ஏலம் எடுப்பதற்கான விண்ணப்பப் படிவம்.

1. விண்ணப்பதாரர் பெயர் :
2. தந்தையின் பெயர் :
3. முழு முகவரி மற்றும் தொலைபேசி / கைபேசி எண் :
4. பல்கலைக்கழகத்திற்கு செலுத்தவேண்டிய உரிமத் தொகை பாக்கி இருந்தால் அதன் விபரம் குறிப்பிடவும் :
5. ஏலதாரரின் காப்பீட்டுத்தொகை : i. தேக்கு மரம் - ரு.12,000/=
   ii. பென்சில் மரம் - ரு.7,500/=
   iii. விறகு மரம் - ரு.15,000/=
6. ஏல ஆரம்ப தொகைக்கு மேல் குறிப்பிட விரும்பும் தொகை குறைந்தபட்சம் **ரு.100/= -க்குமேல்** இருக்கவேண்டும் என்பதை அறியவும்.

**ஏலம் விடப்பட உள்ள வெட்டப்பட்ட மரங்களின் விபரம் (Timber wood / Fire wood):**

| வ. எண் | மரவகைகள் | ஏல ஆரம்பத் தொகை டன் ஒன்றிற்கு |
|---|---|---|
| 1. | தேக்கு மரம் (26 lots) | ரு.6,000/= (டன் ஒன்றிற்கு) |
| 2. | பென்சில் மரம் | ரு.4,000/= (டன் ஒன்றிற்கு) |
| 3. | விறகு மரம் | ரு.1,000/= (டன் ஒன்றிற்கு) |

- **ஏலத்தொகையுடன் மரங்களுக்குரிய விற்பனை வரியையும் (VAT) சேர்த்து செலுத்த வேண்டும்.**

## உறுதிப்பிரமாணம்

இம்மனுவின் விண்ணப்பதாரர் ஆகிய நான், இவ்விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்டுள்ள அனைத்து நிபந்தனைகளையும் (1 முதல் 33 வரை) நன்கு படித்து அறிந்து கொண்டேன். அனைத்து நிபந்தனைகளுக்கும் (1 முதல் 33 வரை) நான் முழுவதும் கட்டுப்பட்டே இந்த ஏலத்தில் விண்ணப்பித்துள்ளேன் என்பதை இதன் மூலம் உறுதியளிக்கிறேன்.

விண்ணப்பம் சமர்ப்பிக்க கடைசி தேதி : 08.04.2015 – மாலை – 05.30 மணிக்குள்.
ஏலம் நடைபெற உள்ள தேதி : 15.04.2015 – காலை – 10.00 மணி முதல் 01.00 மணி வரை.

**இடம் :** ஆர்.வி. நகர். **(கையொப்பம்)**
**தேதி :** . .2015. **விண்ணப்பதாரர் / டெண்டர்தாரர்**

# <u>ஏல நிபந்தனைகள்</u>

1. ஏலம் நடத்தப்படும் இணையதளத்தின் முகவரி: ***www.auctionindia.com***; ஏல நேரம்: 15.04.2015 **புதன்கிழமை** அன்று **காலை** 10.00 **மணிக்கு** ஆரம்பித்து **மதியம்** 01.00 **மணிவரை.**

2. பல்கலைக்கழகத்தில் பணிபுரியும் ஊழியர்கள் இந்த ஏலத்திற்கு விண்ணப்பிக்கக் கூடாது.

3. புதுவைப் பல்கலைக்கழக வளாகத்தில் **தானே புயலினால்** பாதிக்கப்பட்ட வெட்டிய தேக்கு மரங்கள் மற்றும் பல்கலைக்கழக புதிய கட்டிடம் அமைப்பதற்காக உள்ள பகுதிகளில் வெட்டிய மரங்கள் மற்றும் புதியதாக நடப்பட்டுள்ள மரக்கன்றுகள் (Compensatory Afforestation Programme) பகுதிகளில் உள்ள காய்ந்த மரங்கள் இருக்கின்றவை இருக்கின்ற நிலையில் (as is where as condition) எடுத்துச் செல்வதற்கான ஏலத்தில் பங்கு பெறும் நபர்கள் **வெட்டி வைக்கப்பட்டுள்ள பகுதிகளில் உள்ள காய்ந்த மரங்கள் மற்றும் இதர மரங்களை முழுமையாக பார்வையிட்டு விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ளபடி சரிபார்த்து முழுமையாக திருப்தி அடைந்த பின்னரே விண்ணப்பிக்க வேண்டும்.** மரங்களை பார்வையிடுவதற்கு தோட்டக்கலை அலுவலகத்தில் உள்ள ஊழியர்களுடன் அலுவலக நாட்களில் சென்று பார்வையிடலாம்.

4. ஏலத்தில் **( online auction )** பங்குபெற விரும்பும் விண்ணப்பதாரர்கள் ***www.auctionindia.com*** என்கிற இணையதளம் மூலமாக மட்டுமே பங்குபெறமுடியும்.

5. **விண்ணப்பப் படிவங்களை புதுவைப் பல்கலைக்கழக இணையதளத்தின் (www.pondiuni.edu.in) மூலம் மட்டுமே பெற்றுக்கொள்ளமுடியும்.** இணையதளத்தின் மூலமாக பெறப்பட்ட விண்ணப்பப் படிவங்களுடன் "**<u>நிதி அதிகாரி, புதுவைப் பல்கலைக்கழகம்</u>**" என்ற பெயரிடப்பட்ட ரூ.100/= க்கான வரைவோலையை (D.D.) மற்றும் ஏலம் எடுக்க விரும்பும் மரங்களுக்கு உரிய காப்பீட்டுத் தொகையினையும் இணைத்து, தபால் மூலம் சமர்ப்பிக்க விரும்புவோர், "தோட்டக்கலைத்துறை அதிகாரி, தோட்டக்கலைத்துறை, புதுவைப் பல்கலைக்கழகம், ஆர். வி. நகர், காலாப்பட்டு, புதுச்சேரி – 605 014" என்ற விலாசத்திற்கு எதிர் வரும் 08.04.2015 **புதன்கிழமை** அன்று **மாலை** 05.30 **மணிக்குள்** வந்துசேருமாறு அனுப்பவும். ஏலத்தில் கலந்துகொள்வதற்கான பதிவு பெயர் (User name) மற்றும் இரகசிய எழுத்தை (Password)-ஐ இவ்வலுவலகத்தின் மூலம் விரைவு தபாலிலோ (Speed post) (அ) கொரியர் (Courier) மூலமாகவோ தங்களுக்கு அனுப்பி வைக்கப்படும்.

6. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்துடன் விண்ணப்பித்தவரின் பாஸ்போர்ட் சைஸ் புகைப்படம் இணைக்கப்படவேண்டும்.

7. விண்ணப்பத்துடன் மேற்குறிப்பிட்ட காப்பீட்டுத் தொகை மற்றும் விண்ணப்பத்திற்குண்டான தொகைக்கு உரிய வரைவோலையை, தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ விண்ணப்பிப்போர் 08.04.2015 **புதன்கிழமை** அன்று **மாலை** 05.30 மணிக்குள் செலுத்தினால் மட்டுமே ஏலத்தில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படுவர்.

8. விண்ணப்பதாரர் ஏதோ ஒரு காரணத்தினால் பதிவு பெயரையோ (User name) அல்லது இரகசிய எழுத்தையோ (Password) அல்லது இரண்டையும் தவறவிட்டால், முன்வைப்பு தொகைகளை **நேரடியாக மீண்டும் செலுத்தி** வேறொரு பதிவு பெயரையும் (User name) மற்றும் இரகசிய எழுத்தையும் (Password) 13.04.2015 **திங்கட்கிழமை** அன்று **மாலை 05.30** மணிக்கு முன்பாக நேரில் மட்டுமே பெற்றுக்கொள்ளவேண்டும்.

9. தோட்டக்கலைத்துறை மூலம் பெறப்பட்ட பதிவு பெயர் (User name) மற்றும் இரகசிய எழுத்தை (Password) **தவறவிட்டவர்கள்** அவர்களால் பெறப்பட்ட பதிவு பெயர் மற்றும் இரகசிய எழுத்தை வேறொருவர் **துஷ்பிரயோகம்** செய்யாமல் இருக்க **உடனடியாக** தோட்டக்கலைத்துறைக்கு தகவல் தெரிவிக்கவேண்டும்.

10. இணையதளம் மூலம் ஏலத்தில் பங்குபெறுவது குறித்த **மாதிரி ஏலத்தினை (Mock auction)** மேற்குறிப்பிட்ட இணையதளத்தின் மூலம் 13.04.2015 **திங்கட்கிழமை** அன்று மதியம் <u>02.00 **மணி முதல் இரவு** 09.00 **மணி வரை உபயோகப்படுத்தி அறிந்து கொள்ளலாம்.**</u>

11. ஏலத்தில் பங்கு பெற விரும்பும் டெண்டர்தாரர்கள், விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு மர வகைக்கும் தனித்தனியே **ஆரம்ப *ஏலத்தொகைக்குமேல்*** தாங்கள் விரும்பும் ஏலத்தொகையினை குறிப்பிடவேண்டும். ஆரம்ப ஏலத்தொகையை விட குறைவாக குறிப்பிடப்பட்ட ஏல விண்ணப்பங்கள் கண்டிப்பாக ***நிராகரிக்கப்படும்.***

12. சென்ற ஆண்டில் டெண்டர் உரிமம் பெற்று அந்த உரிமத் தொகையை இதுவரை செலுத்தாதவர்கள் இந்த ஏலத்திற்கு விண்ணப்பிக்க முடியாது. கடந்த கால உரிமத் தொகைகளை 10% வட்டியோடு செலுத்திய பிறகே அவர்கள் விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

13. ஏலத்தில் பங்குபெற விரும்பும் டெண்டர்தாரர்கள் ஏல ஆரம்ப தொகைக்கு மேல் குறிப்பிட விரும்பும் தொகை குறைந்தபட்சம் **<u>ரூ.100/= க்குமேல்</u>** தான் குறிப்பிட முடியும் என்பதை அறிந்துகொள்ளவும்.

**இடம் :** ஆர்.வி. நகர். **(கையொப்பம்)**

**தேதி :** 19.03.2015. **விண்ணப்பதாரர் / டெண்டர்தாரர்**

14. விண்ணப்பித்த டெண்டர் படிவங்களின் முடிவுகள் பல்கலைக்கழக நிர்வாக கட்டிடத்தில் ஏல பொறுப்புக்குழு அதிகாரிகள் முன்னிலையில் பரிசீலிக்கப்பட்ட பின்னரே அறிவிக்கப்படும்.

15. டெண்டர்தாரர்கள் பல்கலைக்கழகம் நிர்ணயித்த தொகையை ஏலத்தில் எட்டவில்லையென்றால் பல்கலைக்கழகம் எவ்வித முன்னறிவிப்போ, நிபந்தனையோ இன்றி அன்றோ, வேறு நாளோ மறு ஏலம் நடத்தவோ அல்லது டெண்டர் குழுவின் தீர்மானப்படி முடிவு செய்வதற்கும் பல்கலைக் கழகத்திற்கு முழு உரிமையுண்டு.

16. எந்த காரணமும் கூறாமல் டெண்டரை எற்கவோ, நிராகரிக்கவோ அல்லது இது சம்பந்தமாக வேறு ஆணை பிறப்பிக்கவோ பல்கலைக்கழகத்திற்கு முழு அதிகாரம் உண்டு.

17. வெற்றிபெற்ற டெண்டர்தாரர்கள் தங்களுக்கு கிடைக்கப்பெற்ற **மரவகைகளுக்கு உண்டான மரங்களை** மட்டுமே தங்கள் செலவிலேயே ஆட்களை வைத்து எடுத்துச் செல்லவேண்டும்.

18. வெற்றிபெற்ற ஏலதாரர்கள் ஏல மரங்களை எடுத்துச்செல்வதற்காக பணி அமர்த்தும் வேலையாட்கள் மற்றும் வாகனங்களுக்குண்டான விபரங்களை அலுவலகத்தில் சமர்ப்பித்து பல்கலைக்கழக பாதுகாப்பு அலுவலரால் [**OSD (V&S)]** வழங்கப்படும் அனுமதிச்சீட்டை பெற்றுக்கொண்ட பின்னரே பல்கலைக்கழக வளாகத்திற்குள் நுழைவதற்கும் மற்றும் மரங்களை எடுத்துச்செல்வதற்கும் அனுமதிக்கப்படுவர்.

19. வெற்றிபெற்ற ஏலதாரர் விறகுகளை ஏற்ற வரும்முன் தாங்கள் எடுத்து வரும் காலி வண்டியின் எடையை (empty load) புதுச்சேரியிலுள்ள மின் இயந்திர வாகன எடை மேடையில் (Electronic weighing machine) தோட்டக்கலைத்துறை அலுவலக ஊழியர் முன்னிலையில் சரிபார்த்து ரசீதைக் கொண்டுவரவேண்டும். மரங்கள் மற்றும் விறகுகளை ஏற்றிச்செல்வதற்கு முன்பாக அம்மரங்களுக்குண்டான முன்பணத்தை தோட்டக்கலைத்துறை அலுவலகத்தில் செலுத்திய பின்னரே மரம் ஏற்றிய வாகனம் வெளியே அனுமதிக்கப்படும். விறகுகளை வண்டியில் ஏற்றிய பிறகு, புதுவைப் பல்கலைக்கழக தோட்டக்கலைத்துறையின் ஊழியர் ஒருவரையும் மற்றும் புதுவைப் பல்கலைக்கழக பாதுகாப்பு அலுவலக பிரிவிலிருந்து ஒருவரையும் விறகு ஏற்றிய வண்டியுடன் அழைத்துச்சென்று, அதே மின் இயந்திர எடைமேடையில் எடைபோட்டு, அதற்குண்டான ரசீதை தோட்டக்கலை அலுவலகத்தில் சமர்ப்பிக்கவேண்டும்.

20. வெற்றி பெற்ற டெண்டர்தாரர்கள் ஏலத்திற்குண்டான முழு தொகையினை **பல்கலைக்கழகம் குறிப்பிட்ட கால வரையறைக்குள்** செலுத்திவிட வேண்டும். அப்படி செலுத்தத் தவறினால் எவ்வித முன்னறிவிப்பும், காரணமும் இன்றி அவரின் காப்பீட்டுத் தொகையை பிடித்தம் செய்து, மேலும் அந்த டெண்டர் உரிமத்தை அவருக்கு அடுத்தபடியாக பல்கலைக்கழகம் நிர்ணயிக்கப்பட்ட ஆரம்ப ஏலத்தொகையை விட அதிகமாக குறிப்பிட்டிருக்கும் டெண்டர்தாரருக்கு அளிக்கப்படும்.

21. ஏலம் பெறப்பட்ட மரங்களை விண்ணப்பத்தில் குறிப்பிட்ட காலத்திற்குள் முழுமையாக எடுத்து முடித்த பின்னரே அதற்குண்டான காப்பீட்டுத்தொகை (EMD) திருப்பி அளிக்கப்படும்.

22. முதல் மூன்று ஏலதாரர்களின் காப்பீட்டு தொகை பிடித்தம் செய்து, வெற்றி பெற்ற முதல் ஏலதாரர் ஏலத்தொகையை செலுத்திய பின்னரே, மற்ற ஏலதாரர்களுக்கு காப்பீட்டு தொகை அளிக்கப்படும்.

23. வெற்றி பெற்ற டெண்டர்தாரரின் காப்பீட்டுத் தொகை விண்ணப்பத்தில் குறிப்பிட்ட காலத்திற்குள் மரங்களை எடுத்துச்சென்ற பின்னரே திருப்பி அளிக்கப்படும்.

24. ஒப்பந்ததாரர் பல்கலைக்கழகத்தால் அவ்வப்போது விதிக்கப்படும் நிபந்தனைகளுக்கும், பொதுக் கட்டுப்பாடு மற்றும் தனிக் கட்டுப்பாடு ஆகியவற்றிற்கும் கட்டுப்பட்டவர் ஆவார்.

25. வெற்றி பெற்ற டெண்டர்தாரர் ஏலத்தொகையை குறிப்பிட்ட காலத்திற்குள் புதுவைப் பல்கலைக்கழக கணக்கில் (A/c. no.201) வங்கியில் பணம் செலுத்துவதற்கு முன்பாக **தோட்டக்கலைத் துறை அலுவலரிடம்** வங்கி சலானில் ஒப்புதல் கையொப்பம் பெற்ற பின்னரே வங்கியில் பணம் செலுத்த வேண்டும். அவ்வாறு ஒப்புதல் கையொப்பம் பெறாமல் தொகை செலுத்தப்பட்டால் அத்தொகை ஏலத்தின் தொகையாக ஏற்றுக்கொள்ளப்படாது.

26. வெற்றிபெற்ற ஏலதாரர்கள் மரங்களுக்குண்டான பணத்தை செலுத்தும்போது, **தேக்கு மரங்களுக்குண்டான மொத்த ஏலத்தொகையில் 14.5 சதவீதம் மற்றும் பென்சில் மரங்களுக்கு 10.0 சதவீதம் வணிக வரியும்** சேர்த்து செலுத்தவேண்டும் என்பதை அறியவும். மேலும் புதுவை மற்றும் மத்திய அரசினால் அவ்வப்போது விதிக்கப்படும் வரித்தொகையின் ஏற்றத்தாழ்வுக்கேற்ப **வணிக வரியை** செலுத்தவேண்டும் என்பதையும் அறியவும்.

27. வெற்றி பெற்ற விண்ணப்பதாரர் மற்றும் உதவி பணிகளுக்குண்டான நபர்களின் விபரங்களை தோட்டக்கலை அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும். பல்கலைக்கழக வளாகத்தில் அனுமதிக்கப்பட்ட நேரங்களில் அலுவலக / காவல் பணிபுரியும் ஊழியர்கள் கேட்கும் பொழுது காண்பிக்கும் விதமாக எப்பொழுதும் **அனுமதி சீட்டை** தங்கள் வசம் பாதுகாத்து வைத்திருக்கவேண்டும்.

**இடம் :** ஆர்.வி. நகர். **(கையொப்பம்)**

**தேதி :** 19.03.2015. **விண்ணப்பதாரர் / டெண்டர்தாரர்**

...3..

28. ஏலத்தில் வெற்றி பெற்ற டெண்டர்தாரர் மற்றும் அவரின் பிரதிநிதிகள் ஏலம் கிடைக்கப்பெற்ற தேதியிலிருந்து **30 நாட்களுக்குள்** புதுவைப் பல்கலைக்கழக தோட்டக்கலைத்துறை அலுவலர் முன் அனுமதிபெற்று பல்கலைக்கழக வளாகத்திலிருந்து **வேலை நாட்களில் காலை 9.30 மணி முதல் மாலை 5.30 மணிவரை** மட்டுமே எடுத்துச்செல்ல அனுமதிக்கப்படுவார்கள்.

29. பல்கலைக்கழக பாதுகாவலர்களோ, தோட்டக்கலை ஊழியர்களோ அல்லது நிர்வாகத்தால் நியமிக்கப்பட்ட அலுவலர்களோ கேட்கும்போது டெண்டர்தாரர் உரிமம் பெற்றதிற்கான பணம் செலுத்திய ஆதார நகலை / அடையாள அட்டையை காண்பிக்க வேண்டும்.

30. வெற்றி பெற்ற டெண்டர்தாரர்கள், ஏலத்தில் கிடைக்கப்பெற்ற மரங்களுக்குண்டான முழு தொகையையும் செலுத்திய பிறகு, மரங்களை வெளியில் எடுத்துச் செல்வதற்குண்டான அனுமதி சீட்டை, பல்கலைக்கழக பாதுகாவலர் அலுவலகம் மூலமாக பெற்ற பின்னரே அனுமதிக்கப்படும்.

31. மரக்குவியல்களாக வைக்கப்பட்டுள்ள காய்ந்த மரங்களை ஏலம் எடுப்பவர்கள் அக்குவியல்களில் உள்ள மரவேலைகளுக்கு உண்டான பென்சில் மரங்களை தவிர்த்துவிட்டு விறகுமரங்களை மட்டுமே கணக்கில் கொள்ளவேண்டும்.

32. மரக்குவியல்களில் உள்ள விறகு மரம் மற்றும் பென்சில் மரங்களை ஏலதாரர்கள் அவருடைய செலவிலேயே வாகனத்திற்கு ஏற்றுவதற்கு வசதியாக துண்டு செய்து கொள்ளவேண்டும்.

33. ஏலம் நடைபெறும் நேரத்தில் மின்வினியோகம் மூலமாகவே அல்லது இதர இயற்கையின் சீற்றத்தினாலோ (Natural Calamity) தடங்கல் ஏற்ப்பட்டால் நிர்வாகம் பொறுப்பேற்க முடியாது என்பதை அறியவும்.

**இடம் :** ஆர்.வி. நகர் **பதிவாளர் (பொறுப்பு)**
**தேதி :** 19.03.2015. **புதுவைப் பல்கலைக்கழகம்**

## <u>உறுதிப்பிரமாணம்</u>

இம்மனுவின் விண்ணப்பதாரர் ஆகிய நான், மேற்க்குறிப்பிட்டுள்ள அனைத்து ஏல நிபந்தனைகளையும் (1 முதல் 33 வரை) நன்கு படித்து அறிந்து கொண்டேன். அனைத்து ஏல நிபந்தனைகளுக்கும் (1 முதல் 33 வரை) நான் முழுவதும் கட்டுப்பட்டே இந்த ஏலத்தில் பங்குபெறுகிறேன் என்பதை இதன் மூலம் உறுதியளிக்கிறேன்.

**பெயர் :**

**முகவரி :**

**தொலைபேசி / கைபேசி எண் :**

**(கையொப்பம்)**

**தேதி :** **விண்ணப்பதாரர் / டெண்டர்தாரர்**